# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதி விசேஷமானது

අංක 2276/24 – 2022 අප්‍රේල් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා – 2022.04.21

*2276/24 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல : 4-3/4/2013/D/574.
பிரதேச செயலாளரின் இல. :- KLP/LAND/07/19/03.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

புத்தளம் மாவட்டத்தில், கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில், டச்பே கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள டச்பே கிராமத்தில் நில அளவையாளர் நாயகத்தினால் 2018.80.28 ஆந் திகதியிடப்பட்ட பி. பி. பு 5392 ஆம் இலக்கம் கொண்ட முதற் சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 0.4367 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய பாதுகாப்பு அமைச்சின் தேவை குறித்து முகத்துவாரம் கடற்படை பிரிவினை அமைப்பதற்கான காணிப் பகுதி :

| *காணியின் பெயர்* | *விபரம்* | *உரிமை கோருவோர்* | *விஸ்தீரணம் ஹெக்டயார்* |
|---|---|---|---|
| வன்னன் தோட்டம் | நில அளவையாளர் நாயகத்தினால் 2018.08.28 ஆந் திகதியிடப்பட்ட பி. பி. பு 5392 ஆம் இலக்கம் கொண்ட முதற் சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு இல. 01, 02. | கண்டு பிடிக்க முடியவில்லை | துண்டு இல. 01 - 0.3103<br>துண்டு இல. 02 - 0.1264<br>மொத்தம் - 0.4367 |


1A – G 36592 – 22 (2022/04)



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*மேற்குறித்த காணிக்கு / ஆட்சியை உரிமை எடுத்துக் கொள்ளவிருக்கும் காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கல்பிட்டி பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை ஆட்சி உரிமையை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

*(ஏ. டி. ஏ. பி. தனன்சூரிய),*
*பிரதேச செயலாளர்,*
*கல்பிட்டி.*

*பிரதேச செயலகம்,*
*கல்பிட்டி,*
*2022, ஏப்பிறல் 18.*

EOG 04 - 0092

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*